

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு முறை பயணமாக ஆஸ்திரேலியா நாட்டிற்கு சென்றுள்ள வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (24.07.2024) மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அட்ரியன் லிட்டில் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சியார்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைசெயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கீதாலட்சுமி மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடலின் போது மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்கு, வேளாண்மையில் இயந்திர மயமாக்குதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் உள்ள தொழில்நுட்பங்களை கண்டறிவது குறித்தும் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப புதிய பயிர்கள் மற்றும் பயிர் ரகங்களை அறிமுகம் செய்தல் மற்றும் இப்ப பல்கலைக்கழகமும், தமிழக வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து இணையவழிக் கல்வி, மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறுவதும் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

### தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திருத்தியமைத்தார்!

# ஆணையத்தின் தலைவராக - ரெவரன்ட் ஃபாதர் ஜோ. அருண் நியமனம்!

## துணைத்தலைவர் - எம்.எம்.அப்துல் குத்தூஸ் எனும் இறையன்பன் குத்தூஸ்!

சென்னை, ஜூலை 25 - தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தை ரெவரன்ட் பாதர் ஜோ அருண் அவர்கள் தலைமையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருத்தியமைத்து உத்தர விட்டுள்ளார்.

இது தொடர்பான அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், 1989ஆம் ஆண்டில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது.

அதன்பின், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டில் பிறப்பித்த தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (Act 21 of 2010)இன்படி சிறுபான்மையினர் ஆணையம் சட்டப்பூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சிறுபான்மைச் சமுதாயங்களின் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாடுகளுக்காக செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்த ஆணையத்தின் தலைவராக ரெவரன்ட் பாதர் ஜோ அருண் அவர்களையும், துணைத் தலைவராக எம்.எம். அப்துல் குத்தூஸ் எனும் இறையன்பன் குத்தூஸ் அவர்களையும், ஹெமில்டன் வெல்சன், ஏ.சொர்ணராஜ், நாகூர் ஏ.எச். நஜிமுதீன், பிரவீன் குமார் தாட்டியா, ராஜேந்திர பிரசாத், எம். ரமீத் கபூர், ஜெ. முகமது ரபி, எஸ். வசந்த் ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்

# கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 6,52,559 பேருக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள்!

## மரக்காணத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!



திண்டிவனம், ஜூலை 25 - தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப் பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் ஊரகப் பகுதிகளில் கடந்த 11ஆம் தேதி தர்மபுரியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதை அடுத்து விழு ப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம் தலைமையில்

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களிடம் முதல்வர் திட்ட முகமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப் பெற்ற பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார் .

தொடர்ந்து வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களையும்,

மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து கூடிய பெட்டகத்தனையும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டு காலத்தில் திராவிட மாடல் அரசால்தமிழகத்தில் 6,52,559 பேருக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள்வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ,திண்டிவனம், மரக்காணம் உள்ளிட்ட தாலுகாவில் 6000 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகதெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்

தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் தமிழக முழுவதும் 12500ஊராட்சிகளில் 2500இடங்களிலும்,விழுப்புரம் மாவட்டத்தில் 91 இடங்களில் இம் முகம் நடைபெறுகிறது.

எப்பொழுதும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களுடைய பல்வேறு கோரிக்கை நிறைவேற்றும் வகையில் ஒரு உன்னதமானமக்களுடன் முதல்வர் திட்டத்தினை முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தி வருவதாகஅமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

முகாமில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், பொருளாளர் ரமணன், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்டஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன் ,வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் திருநா வுக்கரசு, மகாலட்சுமி காளிதாஸ், வேலாயுதம், விநாயகம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜசேகர், மன்னார். ரமேஷ், மல்லிகா காண்டீபன்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் திமுக ஒன்றிய நிர்வாகிகள்குமார், ரவிக்குமார், முருகன், ஆதிகேசவன் , ராமமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை,எண்டியூர் கிளைக் கழக நிர்வாகிகள் ஜெயச்சந்திரன் மேஸ்திரி ஏழுமலை, அருள் குமரன், கமலா முருகன், ஏழுமலை ,ஜானகிராமன், சேகர், பச்சையப்பன் ,வாசுதேவன், ராபர்ட் ,சிவகுமார் , உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர்சிவசேனன் நன்றி கூறினார்.

### பெருநகர சென்னை மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 25 - சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், நாளை ( 26.07.2024 - வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனைக் கூட்டத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 30.07.2024 அன்று நடைபெறும் மாமன்ற கூட்டம் தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 23.07.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருச்சி திருவெறும்பூரில் அமைந்துள்ள மலைக்கோயில் என்று அழைக்கப்படும் ஸ்ரீநறுங்குழல் நாயகி உடனுறை எறும்பீஸ்வரர் ஆலயத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கோவிலில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு நடத்தினர் . இந்த ஆய்வின்போது. மாநகர செயலாளர் மண்டலம் 3 தலைவர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட இணை ஆணையர் பிரகாஷ், உதவி ஆணையர் லட்சுமணன், தக்கார் ரவிச்சந்திரன், செயல் அலுவலர் வித்யா மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### திருவெறும்பூர் - மலைக்கோயில் என்றழைக்கப்படும்

# எறும்பீஸ்வரர் ஆலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டனர்!

திருச்சி, ஜூலை 25 - திருச்சி திருவெறும்பூரில் அமைந்துள்ள மலைக்கோயில் என்று அழைக்கப்படும் ஸ்ரீநறுங்குழல் நாயகி உடனுறை எறும்பீஸ்வரர் ஆலயத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கோவிலில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு நடத்தினர் .

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலமாகவும், காவிரி தென்கரையில் அமைந்துள்ள ஏழாவது தலமாகவும் உள்ள சிறப்புமிக்க பழமை வாய்ந்த ஸ்ரீ நறுங்குழல் நாயகி உடனுறை எறும்பீஸ்வரர் ஆலயம் திருச்சி மாவட்டம் திருவெறும்பூரில் அமைந்துள்ளது. தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயத்தில் 1998 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. அதன் பிறகு குடமுழுக்கு நடைபெறாமல் இது வரை உள்ளது. இந்த நிலையில் குடமுழுக்கு பணிகள் நடைபெற வேண்டுமென அப்பகுதி மக்கள் பக்தர்களும் கோரிக்கை விடுத்த நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பாலாலயம் செய்யப்பட்டது.

தொடர்ந்து குடமுழுக்கு நடைபெறும் என்று எதிர்பார்ப்பில் இருந்த நிலையில் இது வரை அதற்கான முன்னேற்பாடுகள் எதுவும் நடைபெறாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் திருச்சிக்கு பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மற்றும் பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் எறும்பீஸ்வரர் ஆலயத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது ஆலயத்தில் அடிவாரத்தில் அமைந்துள்ள தெப்பக்குளத்தை பார்வையிட்டு பின் 128 படிகள் ஏறி மலைமேல் சென்று சிவபெருமான் வழிபட்டனர். தொடர்ந்து அங்கு நடைபெறக்கூடிய கோவில் திருப்பணிகள் குறித்து இரு அமைச்சர்களும் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது,

கோவில் திருப்பணிகள் முழு வீச்சில் நடைபெறவும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிகள் எந்த அளவில் நடைபெறுகிறது என்பது குறித்தும் அதே போல் அனுமதிக்காத பணிகளுக்கு தொல்லியல் துறையிடம் அனுமதி பெறுதல் குறித்தும், தெப்பக்குளம் பராமரிப்பு, விநாயகர் சன்னதி புதுப்பித்தல், முன் மண்டபம் சீரமைத்தல் ,உள்ளிட்ட பல்வேறு பணிகளை விரைவு படுத்த வேண்டி இந்து சமய அறநிலைத்துறையிடம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இன்று இந்த ஆய்வானது நடைபெற்றது. கூடிய விரைவில் அமைச்சர், மாவட்ட ஆட்சியர் தொல்லியல் துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து ஒரு ஆய்வு கூட்டம் நடத்த உள்ளோம் அதில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, என்னென்ன பணிகள் எந்த நிலையில் உள்ளன, அனுமதிக்காத பணிகளுக்கு அனுமதி பெறுதல் , நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவை குறித்து ஆய்வு கூட்டத்தில் விவாதிக்கப்படும். விரைவில் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையில் கோவில் திருப்பணிகள் நிறைவடைந்து குடமுழுக்கு நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மத்திய அரசின் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் 26 கோவில்கள் உள்ளன. இதில் ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த தமிழக அரசு மத்திய அரசின் தொல்லியல் துறைக்கு விண்ணப்பித்து உள்ளது. அவர்களும் படிப்படியாக திருப்பணிகள் செய்து வருகின்றனர்.

தி.மு.க. அரசு பொறுப் பேற்ற பிறகு தொல்லியல் துறைக்கு அழுத்தம் கொடுத்து ஆறு கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஏனைய கோவில்களில் குடமுழுக்கு நடத்த தொல்லியல் துறைக்கு இந்து சமய அறநிலைத்துறை தொடர்ந்து அழுத்தத்தை கொடுக்கும் என்றார்.

இந்த ஆய்வின்போது. மாநகர செயலாளர் மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட இணை ஆணையர் பிரகாஷ், உதவி ஆணையர் லட்சுமணன், தக்கார் ரவிச் சந்திரன், செயல் அலுவலர் வித்யா மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ.தங்கம் தெற்கு மாவட்ட விவசாய அணி துணை தலைவர்,கீழையூர் கே.பரமசிவம் சகோதரர் கே.மழைச்செல்வம்,ஆசிரியை ராஜாத்தி ஆகியோரின் இல்ல விழாவில் பங்கேற்று வாழ்த்தினார். மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆசிரியர் எம்.ரமேஷ், தெற்கு மாவட்ட மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் ஆர். கண்ணதாசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.ராஜபெரியண்ணன், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் க.பிரசாத், அவைத்தலைவர் சுரேஷ்,ஆலங்குடி போக்குவரத்து கழக தொ.மு.ச. கிளை செயலாளர் ஆர்.கணேசன், சங்க பி.ஆர்.ஓ. கறம்பக்குடி வே.ராஜு ஆகியோர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பே. மாரி அய்யா

**ஜூலை 25 (2020)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்” என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் “மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா” என்றும் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**